

பகவான் ஸ்ரீ சத்ய சாயி

# நல்வாக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

SSS

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி நல் வாக்குகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

அவர்களின்

திருவடி மலர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSS

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி

# நல் வாக்குகள்

தெய்வ சிந்தனையுடன் துயிலெழு.

சாத்வீக ஆகாரங்களை உட்கொள். தாமஸீக மான போதை தரும் பதார்த்தங்களை மனதாலும் எண்ணாதே.

வாழ்வதற்காகவே உணவருந்து; உண்பதற் காக வாழாதே.

சாந்திபிரேமைகளினால் உன் இரத்த நாளங் களை நிரப்பு.

நீ அறிந்துகொண்ட நன்மைகளைச் செயலாற்ற முயற்சி செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதரர்கள் எவ்விதம் நடந்து கொண்டால் நீ மகிழ்வாயோ, அதுபோல் நீ முதலில் நடந்து காட்டு.

இதரர்கள் எதைச் செய்தால் நீ அதைத் தவறு என எண்ணுவாயோ, அத்தகைய தவற்றை ஒருபொழுதும் செய்யாதே.

இதரர்கள் உன்னை எவ்விதம் கௌரவிக்க வேண்டுமென விரும்புகிறாயோ, முதலில் நீ அத்தகைய கௌரவத்தை இதரர்களுக்கு அளிக்கக் கற்றுக்கொள்.

இதரர்களிடத்தில் குற்றங்களைத் தேடும் பாழான புத்திக்கு இடம் கொடாதே.

உன்னிடமுள்ள நற்பண்புகளை யார் என்ன சொன்ன போதிலும் விடாமல் காப்பாற்று.

இலௌகிக சுகங்களுக்காக இறைவனைப் பிரார்த்திக்காதே; சத்திய பிரேமைகளுக்காக, நித்திய கருமங்களை அர்ப்பணம் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய சக்தியை மறந்தால் அதுவே மரணம்.

ஆத்ம சிந்தனையுடனிருப்பதே வாழ்வு.

நாளுக்கு ஒரு குருவையும், நாளுக்கு ஒரு தெய்வத்தையும் மாற்றாதே.

வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளும், நம்பிக்கைக்கு ஒரு தெய்வமும் போதுமானது.

நகைகள் வெவ்வேறாயினும் தங்கம் ஒன்றே; அது போன்றே ரூபங்கள், நாமங்கள் ஆகியவை வெவ்வேறாயினும், தெய்வம் ஒன்றே.

செல்வத்தை அபகரிக்கும் குருக்களிடம் உன் சித்தத்தை அர்ப்பணம் செய்யாதே. அவர்களிருக்கும் இடத்திற்குங் கூட செல்லாதே.

சித்தத்தை அபகரித்து தன்வசம் சேர்க்கும் தன்மை தெய்வத்திற்கு மட்டும்தான் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும், எத்தகைய சிந்தனைகள் வந்த போதிலும், உன் நம்பிக்கையை மட்டும் விட்டு விடாதே; அதுவே தவம்; அதுவே சாதனை; அதுவே நல்ல பாதுகாப்பு.

நல்லமனமே மதத்தின் பலன். மனம் கெட்டால் மதம் இராது.

நீதியே உன் ஜாதி; அதைக் கைவிடுவாயானால், நீ குரங்கைவிடக் கீழானவனே.

ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்து; உன்னைச் சார்ந்தவர்களுடன் ஒத்துழை.

அன்பிற்காகவே அன்பு செலுத்து; அன்பை விட மேலான தெய்வம் இல்லை.

உன்னுடைய பேச்சு, பாட்டு, சிந்தனை இவைகளை அன்பு மயமாக்கு.

புலனடக்கத்திற்கு மிஞ்சிய ஆனந்தம் வேறொன்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான பேச்சு ஆனந்தத்தைக் கொடுக்கும்; அதிகப் பேச்சு மதியைக் கெடுக்கும்.

வாரத்திற்கு ஒரு முறை உண்ணுவிரதத்தைக் கடைப்பிடி; அன்று பாலையும், பழங்களையும் அளவுடன் உட்கொள்; அதனுல், ஆரோக்ய மும், ஆனந்தமும் கிடைக்கும்.

சோம்பேறித்தனத்தை தூரவிலக்கி, 'ஸோஹம்' தத்துவத்தைக் கடைப்பிடி.

புகழ்ச்சிக்காகப் பாடுபடாமல், அனுஷ்டானத் தில் கவனத்தைச் செலுத்து.

உலகத்தில் மிகவும் விலை உயர்ந்த பொருள் தான் காலம்; ஒரு நொடியை வீணுக்கு வாயானுல், உன் வாழ்க்கையே பாழாகி விடும்.

''பரோபகாரார்த்தமிதம் சரீரம்'', ''உபகாரம் செய்யவே உடல்'', இதரர்களின் ஆனந் தம் உன் ஆனந்தத்தின் பிரதிபிம்பமே; வேறெனை எண்ணுதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதரர்களின் கஷ்டங்களை உன்னுடையவை களாகப் பாவித்து, அவைகளை நீக்க உன்னால் இயன்ற முயற்சி செய்.

நீ தெய்வத்தை எவ்விதம் தேடிக்கொண்டிருப்பாயோ, தெய்வமும் அது போன்றே உன்னைத் தேடிக்கொண்டிருக்கும்.

எல்லா இடங்களிலும் தெய்வம் இருக்கிறதென நம்பினால், எங்கெங்கே பார்த்தாலும், அங்கங்கே தரிசிக்கலாம். "யத்பாவம் தத் பவதி".

அடைய வேண்டிய இடமே தெய்வம்; அது தான் எப்பொழுதும் உண்மை.

விடவேண்டிய இடம் உலகம்; அது எப்பொழுதும் பொய்.

யாருடைய மனம் தூய்மையான அன்பினால் நிறைந்திருக்கிறதோ, அத்தகையவர்களின் செயல்களனைத்தும் தர்மம் நிறைந்த செயல்கள். அவைகளைப் பின்பற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகம் மாசுபடிந்த ஒரு கண்ணாடி; அதன் மூலமாக மானிடர்கள் அனைத்தையும் பார்த்து தெரிய வேண்டியதாக இருக்கிறது.

நன்மை தீமைகளை ஆராய்ந்தறியும் கண்களைச் சம்பாதித்துக் கொள்வதே உயர்ந்த இலட்சியம்.

எதுவரை அகங்காரம் நிறைந்திருக்குமோ, அதுவரை மோட்ச சாதனமான ஆத்ம ஞானம் ஏற்படாது.

உலக விவகாரங்கள் அனைத்திற்கும் மிகச் சிறந்த கருவி ஞானம்.

தர்மம், தூய்மை, தானம், அன்பு இவைகள் சத்தியத்தின் நான்கு பாதங்கள்.

உள்ளத் தூய்மையுடன் எதை சமர்ப்பித்தாலும், இறைவன் ஏற்றுக்கொள்வார். (பத்திரம், புஷ்பம், பழம், ஜலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையைத் தரையில் ஊன்றினால் முளைக்கு மேயல்லாது, தகரத்தின் மீது போட்டால் முளைக்காது.

சாஸ்திர ஞானம் வளராததற்குக் காரணம் அனுஷ்டானமில்லாத பிரசாரமே; ஆகை யால் அனுஷ்டானம் மிகவும் அவசியம். அதன் பிறகே அனுபவமும், பிரசாரமும்.

பூஜாபீடத்தின் அருகில் பிரகாசிக்க வேண்டிய தீபம் எதுவென்றால், சஞ்சலமற்ற மனம்.

புலன்கள் என்கிற ஜன்னல்களின் மூலம் விஷய வாசனைகள் என்கிற காற்று உட்புகுந்து தீபத்தை அணைக்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

அசைந்து எரியும் தீபத்தைப் போன்ற புத்தி ரஜோகுண இயல்புடையது. திரியில் கரடு கட்டி மங்கலாக எரியும் தீபத்தைப் போன்று சிரத்தையற்றதாகவும், உற்சாக மற்றதாகவும் உள்ள புத்தியே, தமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண இயல்புடையது. ஒரே நிலையாகப் பிரகாசத்துடன் எரியும் தீபத்தைப், போன்ற புத்தியே, சத்வகுணம்.

நானே கர்த்தா என்கிற எண்ணமே மானிடனின் துக்கங்களுக்கு மூல காரணம்.

நறுமணத்துடன் கூடிய மனம், புத்தி என்கிற மலர்களையே இறைவன் மிகவும் விரும்புவார்.

மானிடனுக்கு அனைத்தும் தெரியும். ஆனால், தன்னைத்தான் யாரென தெரிந்துகொள்ளாமலிருக்கிறன். அதை அவன் தெரிந்து கொள்வானுனல், பிறகு தெரிந்து கொள்ளவேண்டியது எதுவுமில்லை.

கருமத்தில் கட்டுப்பட்டவன் ஜீவன்; பக்தியில் கட்டுப்பட்டவன் தேவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனுக்கும் தேவனுக்கும் இடையே வேறுபாடற்ற ஞானத்தை அடைவதே மேலான ஆற்றல்.

புலன்கள் தமக்குத் தோன்றியதை உணர்த்துமேயல்லாது, உள்ளதை உள்ளபடி காட்டாது. கேட்டதும், பார்த்ததும் உண்மையானல் சாஸ்திரங்கள் எதற்கு?

நான் யார் என்பதை ஆராய்வதே ''த்வம்'' என்ற பதத்தின் சோதனை.

அனைத்திற்கும் கர்த்தா யாரென ஆராய்வதே "தத்" என்ற பதத்தின் சோதனை.

ஜீவனும், பிரம்மமும், ஒரே பொருளாயிருக்கும் தன்மையை நிரூபிப்பதே ''அஸி'' என்ற பதத்தின் நிர்ணயம்.

ஆர்வத்துடனும், பக்தியுடனும் செவிகொடுத்துக் கேட்பவனையே ''கௌந்தேயன்'' என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தி குமாரனையும் ''கௌந்தேயன்'' என உலகத்தில் சாதாரணமாக அழைக்கப்படுகிறது.

''குருநந்தனன்'' என்றால் கருமத்தை செயலாற்றுவதினால் மகிழ்ச்சியடைபவன் எனப் பொருள்.

''பா'' என்றால் பிரகாசம்; ''ரதன்" என்றால் சோபிக்கச் செய்தவன் எனப் பொருள். பிரம்ம வித்தையின் பிரகாசத்தைச் சோபிக்கச் செய்பவனே பாரதீயன்.

மலர்கள் வெவ்வேறாயினும் நார் ஒன்றே: அதுபோன்றே சரீரங்கள் வெவ்வேறாயினும் ஆத்மா ஒன்றே.

இதரர்கள் உனக்குச் செய்த தீமைகளை மறந்துவிடு; நீ பிறருக்குச் செய்த நன்மைகளுக்காகப் பயனை எதிர்பார்க்காதே. அதுவே நிஷ்காம கர்மா.

(ஆசையற்ற கருமம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்காரம் துர்க்குணங்களுக்கெல்லாம் தாய் வீடு.

ஜீவனுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள திரையே அகங்காரம்.

இவ்வுலகத்தில் சுகத்தை அடைய விருப்பமிருக்கலாம். ஆனால் தன்னை மூழ்கடிக்கும் வரை அவ்விருப்பத்தை வளர்க்கக்கூடாது. பருப்பு எவ்வளவோ அந்த அளவு உப்பைப் போட்டால் சாப்பிட முடியுமா?

எது நிகழ்ந்தாலும், நிகழாவிட்டாலும் மரணம் மட்டும் நிகழ்ந்தே தீரும். மாண்டவன் ஒருபிடி மண்ணையும் தன்னுடன் எடுத்துச் செல்ல மாட்டான்.

பாம்பிற்குப் பால் வார்ப்பதால் விஷம் பெருகுவதைப் போன்று, விஷய சுகத்திற்காக முயற்சி செய்தால், தேகமே "நான்" என்கின்ற விஷம் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''க்ஷேத்ர'' (உடல்) ''க்ஷேத்ரக்ஞன்'' (ஆத்மா) என்பதில் ''க்ஞ'' காரமே பேதம். ''க்ஞ'' சேர்ந்தது ''க்ஷேத்ரக்ஞ''. அது இல்லாதது ''க்ஷேத்ர''. அதாவது ஞானி க்ஷேத்ரக்ஞன். ஞானம் இல்லாததே க்ஷேத்ரம்.

இறைவனின் சொற்கருத்துக்களின் மீது நம்பிக்கைதான் பிரதான ஆதாரம். அனுபவமில்லாத ஆடம்பர வாக்கியங்கள் ஆதாரமற்றவை.

வெங்கலத்தின் ஓசை அதிகம். தங்கம் அது போல் சப்திக்காது. ஓசைக்கு விலை கொடுக்கலாகாது;. பொருளுக்குத் தகுதியான விலையைக் கொடுக்க வேண்டும்

''ச்ரத்தாவான் லபதே ஞானம்" என்றபடி ஆர்வமுள்ளவர்களுக்கே ஞானம்; ஆர்வமற்றவர்கள் தெய்வத்தின் சன்னிதியில் இருந்த போதிலும் உலக விவகாரங்களுக்கே அடிமையாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்சயாத்மா வினஸ்யதி" சந்தேகமுள்ளவர்கள் எத்தனை பிறவி எடுத்த போதிலும் உண்மையை உணரமாட்டார்கள். சந்தேகம் மிகப் பெரிய பூதம். சந்தேகமில்லாதிருப்பதே சத்திய ஸ்தானத்திற்கு நேர் வழி.

அபிமானமற்ற உள்ளமே பேரின்பம் நிறைந்த உள்ளம்.

ஆடம்பரம் அற்றிருப்பதே மானிடனுக்கு நற்குணம்.

ஆடம்பரம் இவ்வுலகத்தை விட்டு என்று ஒழியுமோ, அன்றுதான் உலகத்தில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட முடியும்.

வெளித்தூய்மைகளைக் காட்டிலும், உட் தூய்மை ஆயிரமடங்கு மேலானது.

வாழ்வு என்ற மரம் மேலே எவ்வளவு உயரம் வளருமோ, அந்த அளவு தூய்மை என்கிற வேர் கீழே ஆழமாக ஊன்றியிருந்தால் தான் மரத்திற்குப் பாதுகாப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருக்குள்ளவர்களுக்கு நற் குணங்கள் மிகவும் தூரம். துர்க்குணங்களே அத்தகையவர்களுக்குத் தாய்வீடு; செருக்குள்ளவர்களுக்கு, உயிரினங்களிடத்தில் அன்பு, இரக்கம், தூய்மை, வணக்கம் முதலான குணங்கள் அடையாளத்திற்குக்கூட இரா.

கர்வம், போக்க முடியாத விஷம். அத்தகையவர்களின் கதி, அதோ கதிதான்.

இரண்யகசிபு, இராவணன், கம்சன், துரியோதனன் முதலானோர்கள் கர்வத்திஞல் என்ன சாதித்தார்களோ, அதே பலன் தான் கர்வமுள்ளவர்களுக்கும் கிடைக்கும்.

கடல் இருந்தால் அலைகள் இராமலிராது. உலகப்பற்று இருந்தால் சுக துக்கங்கள் இருந்தே தீரும்.

ஈ எல்லாப் பொருள்களின் மீதும் உட்காரும், ஆனல், நெருப்பின் சமீபம்கூட செல்லாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றால் உயிர்வாழாது. அதுபோன்றே மனம் அனைத்தையும் சிந்திக்கும். ஆனால், ஆத்மாவை மட்டும் சிந்திக்காது. ஆத்மாவைச் சிந்திக்குமானால், உலக சிந்தனையே இராது.

கானல் நீர் (நீரைப் போன்று காட்சியளிக்கும் வெய்யில்) எவ்வளவு பொழிந்தாலும் பூமி நனையாது. அது போன்று ஆர்வமில்லாமல் எத்தனை கருமங்களைச் செயலாற்றினாலும் சித்த சுத்தி ஏற்படாது.

சித்தம் எத்தகையதோ, பயனும் அத்தகையதே; இரண்யகசிபு "கடவுளே இல்லை" என உலகம் முழுவதும் தேடினான்; கடவுளை எங்கேயும் காணமுடியவில்லை. "கடவுள் எங்கெங்கும் நிறைந்திருக்கிறார்" என்கிற நம்பிக்கையுடனிருந்த பிரகலாதனுக்கு இறைவன் தூணிலேயே காட்சி தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடமுள்ள பாவனையையே பிறரிடத்திலும், காண்கிறார்கள். கஸ்தூரிமான் தன் கொப்பூழிலுள்ள நறுமணத்தை புல்லில் இருப்பதாக எண்ணி அங்கு தேடுகின்றது.

பிரபஞ்சம் ஓர் ஊஞ்சல். ஊஞ்சலுக்கு ஆதாரம் மேலே இருக்கின்றதேயல்லாமல், கீழே இல்லை. ஆகையால் மேன்மையான நோக்கத்தைக் கடைப்பிடித்தால் ஊஞ்சலில் உள்ளவர்களுக்கு விபத்துக்கள் நேராது.

ஆதாரத்தைத் தேடவேண்டுமேயல்லாது, ஆதேயத்தைப் பிரதானமாகக் கருதுதல் கூடாது. எதனால் எல்லாம் நடைபெறுகின்றதோ அதைக் கவனிக்கவேண்டும். நடைபெறுவதை முக்கியமாக கருதுதல் கூடாது.

மோட்சக் கோயிலுக்கு சரணாகதியே கோபுர வாயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழிசல்கள் நிறைந்த ஓட்டைக் குடையினால், மழைநீர் நம்மீது விழுவதை நிறுத்த முடியாது. அனுஷ்டானமில்லாத ஞானம் ஓட்டைக் குடைக்கு ஒப்பாகும்.

''பணிக்கிபராார்; திண்டிக்கிதயார்''-வேலை செய் என்றால் ஓடுகின்ற—சாப்பிடு என்றால் போடு என்கின்ற சிஷ்யனும், செல்வத்தை அபகரிக்கும் குருவும் இருந்தால் கல் தெப்பத்தில் ஏறி ஆற்றைக் கடக்க முயற்சிப்பதற்கு ஒப்பாகும்.

பொன், பொருள், வஸ்து, வாகனம் போன்ற ஆடம்பர ஆசைகள் நிறைந்த, அகங்கார அபிமானங்களுக்கு அடிமையாவதைக்காட்டிலும், இறைவனுக்கு அடிமையாவதே மேலான இலட்சியம்.

நகைப்பவனே நாராயணன்; அழுபவனே நரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தையே துக்கத்திற்குக் காரணம்; அது இல்லாததே சுகமும், தைரியமும்.

''அஹம்'' (நான்) முதலாம் வேற்றுமை. ''மம" (என்னுடையது) ஆறும் வேற்றுமை.

சாவு, வாழ்வு இரண்டிலும் துக்கமாவது, சந்தோஷமாவது அடையாதவனே பண்டிதன். ''பண்டா" என்றால் தத்துவ நிர்ணய புத்தி; சரீரம் இத்தகையது. ஆத்மா இத்தகையது, என அறிந்து செயலாற்றுபவனே பண்டிதன்.

தர்க்கம் அகங்காரத்தின் சின்னம்; அது இருட்டில் தடுமாறுவதற்கு ஒப்பாகும்.

உலகத்தில் உனக்கு உண்மையான உறவினர்கள் யாருமில்லை. சத்தியம் ஒன்றே உண்மையான உறவினன்.

உன்னை நீ காப்பாற்றிக்கொண்டு, பிறகு இதரர்களைக் காப்பாற்ற முயற்சிசெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சோதனைக்கு உன் தந்தையே தடையாக இருந்தால், பொருட்படுத்தாமல் பிரகலாதனைப் போன்று எதிர்த்து நில்.

ஆத்ம சோதனைக்கு உன் சகோதரனே தடையாக இருந்தால், விபீஷணனைப் போன்று அவனை விட்டு விலகி தூரமாக வந்து விடு.

தெய்வ வழிபாட்டிற்கு உன் மனைவியே தடையாக இருந்தால், பர்த்ருஹரியைப் போன்று வெளியேறிவிடு.

தெய்வ சன்னிதியைக்கோரி முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது, அதை அழிப்பதற்கு முயற்சித்தால், குருவாயினும் சரி, பீஷ்மரைப்போன்று விலகிவிடு.

இந்நாளில் போதனை அளிக்கத் தகுதியான குருக்கள் கிடைப்பது அரிது; ஆகையால், குருக்களைத் தேடி அலையாமல் தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகிய அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இறைவன் ஒருவனே என்கிற நம்பிக்கையுடன், தெய்வ வழிபாட்டிலேயே ஆனந்தத்தை அனுபவிக்க முயற்சி செய்.

"ஸாலோக்யம்" இராஜ்யத்தின் பிரஜைகளைப் போன்றது.

"ஸாமீப்யம்" ராஜாவின் வேலைக்காரனைப் போன்றது.

"ஸரூப்யம்" ராஜாவின் தம்பியைப் போன்றது.

"ஸாயுஜ்யம்" ராஜாவின் மூத்த குமாரனைப் போன்றது.

"ஸோஹம்" ஞானம் (ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றெனப் பாவித்தல்) "தாஸோஹம்" பக்தி. (அடியேன் தொண்டன் எனப் பாவித்தல்)

மனம் கொசுவைப் போன்றது. கொசு எல்லாப் பொருள்களின் மீதும் உட்காரும். ஆனால், நெருப்பின் சமீபம் மட்டும் செல்லாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பிடம் நெருங்கினால், கருகிச் சாம்பலாகிவிடும். அது போன்றே மனம் அனைத்துடனும் சேரும். ஆனால், தெய்வத்துடன் சேர விரும்பாது. தெய்வத்துடன் சேர விரும்பினால், மனம் என்பதே இராது. ஆனால் மனம் நாசமடைய வேண்டுமே? அதற்காக தெய்வத்துடன் சேர முயற்சி செய்யவேண்டும்.

காற்று இறங்கி பிரகாசம் குறையும் பெட்ரோமாக்ஸ் விளக்கிற்கு அடிக்கடி காற்றடிப்பதைப் போன்று, பக்தன் அடிக்கடி மனவெழுச்சிக்குரிய போதனைகளைப் பெரியோர்களிடம் சென்று கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உள்ளத்திற்குச் சரியான பிரகாசம் ஏற்படும்.

இருட்டு என ஒன்று உலகத்தில் இல்லை. அது பிரகாசத்தின் இயல்பின்மையே.

அக்ஞானம் என ஒன்று உலகத்தில் இல்லை. அது ஞானத்தின் இயல்பின்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக துக்கங்கள், இகழ்ச்சி புகழ்ச்சி இவைகள் வளர்பிறை, தேய்பிறை போன்றவைகள். அவைகள் இல்லையானால், உலகம் நடை பெறாது.

ஆகாயத்தில் அநேக மேகக்கூட்டங்கள், இடி மின்னல்கள், நட்சத்திரங்கள், சூரிய சந்திரர்கள் முதலானவைகள் இருந்த போதிலும், ஆகாயம் அவைகளுடன் எத் தகைய தொடர்புகளுமில்லாமல், களங்க மற்றதாய், அசைவற்றதாய், எதனுட னும் சேராமல், இருப்பதைப்போன்று உள் ளத்தில் மாறுபட்ட இருவகை நிலைக ளுக்கு இடந்தராமல், எதனுடனும் சேராமல் வாழ வேண்டும்.

பயனை எதிர்பார்த்து வீட்டுவேலை செய்பவன் கூலிக்காரன். பயனை எதிர்பார்க்காத வன் வீட்டுச் சொந்தக்காரன்.

ஏழையாக இருப்பவனே கூலி வேலைக்குச் செல்வானேயல்லாமல், சம்பத்துள்ளவன் கூலி வேலைக்குச் செல்லமாட்டான். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று, தெய்வ சம்பத்து இல்லாதவனை கூலிக்காரனைப் போன்று கோரிக்கைகளுக்காக தெய்வத்தொண்டு செய்கிறான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பிள்ளைப் பூச்சி சேற்றினுள் வசித்தபோதிலும், அதன் மீது சேறு ஒட்டிக் கொள்வதில்லை. கம்பளிப்பூச்சி மேட்டில் வசித்தாலும் அதன் மீது சேறு ஒட்டிக் கொள்ளும். அதுபோன்றே காவியுடையணிந்து, கமண்டலத்துடன், ஆடம்பர வேஷம் தரித்து, மௌனியைப் போன்று காட்சியளித்த மாத்திரத்தில் துறவியாக மாட்டான். பிரம்ம தத்துவத்தில் மூழ்கியவனே உண்மையான துறவி.

மோட்சத்தில் விருப்பமுள்ளவர்கள் மூன்று வகையானவர்கள். 1. மீன் வகை. 2. மிருக வகை. 3. ஆமை வகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைத்தவிர பூமியின் மீது உயிர் வாழாதது மீன். அதுபோன்றே சில சாதகர்கள் மக்கள் கூட்டத்தையும், சுற்றத்தாரையும் விட்டு விலகி தூரமாகச் சென்று சாதனைகளைச் செயலாற்ற விரும்பமாட்டார்கள்.

பூமியைத் தவிர நீரில் வாழாதது மிருகம்: அதுபோன்று சில சாதகர்கள் மக்கள் கூட்டத்தில் எத்தகைய சாதனைகளையும் செயலாற்ற விரும்பமாட்டார்கள். அவர்கள் ஏகாந்தத்தை (தனிமையை) தவிர அன்னிய மார்க்கங்களில் சாதனைகளைச் செயலாற்ற ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பூமியிலும் நீரிலும் சமமாக ஜீவிப்பது ஆமை: அது போன்று சில சாதகர்கள் இல்லற தொடர்பிலும், ஏகாந்தத்திலும் சமபாவத்துடன் சஞ்சலமற்ற தியானத்தை செயலாற்றுவார்கள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று வகையானவர்களில், மீன் வகுப்பு சாதகன் ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகன்; மிருக வகுப்பு சாதகன் நடுத்தர சாதகன்; ஆன்ம வகுப்பு சாதகன் முழுமை யடைந்த சாதகன்; அதாவது ஞானி.

மரத்தை மேலே வெட்டினால் பயனில்லை. அதன் வேரையே எடுத்தெறியவேண்டும். அதுபோன்றே, மேல்வாரியாக புலன் களை அடக்குவதினால், பிரயோசனம் ஏற் படாது. சங்கல்பம் என்கிற வேரையே இல்லாமல் செய்து விட்டால், மறுபிறப்பு இராது.

மனோநாசம் இல்லாதவர்களுக்கு சித்த சுத்தி ஏற்படாது. சித்த சுத்தி இல்லாதவர்க ளுக்கு பிரம்மபாவம் ஏற்படாது. பிரம்ம பாவம் இல்லாதவர்களுக்கு ஆத்ம சாந்தி கிட்டாது. சாந்தியே இல்லையானால், சுகம் எங்கிருந்து கிடைக்கும்?

காலையிலேயே பகல் உணவிற்காக உணவுச் சீட்டு வாங்கியவருக்கும், அந்த நேரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குச் சென்று உணவு விடுதியில் உண விற்காக முயற்சி செய்பவருக்கும் எத்த கைய வேறுபாடோ, இளமைப்பருவத் திலிருந்து சாதனைகளைச் செய்து வருப வருக்கும், அப்போதைக்கப்போது, மறு பிறப்பு ஏற்படாமலிருப்பதற்காக சாதனை களைச் செய்பவருக்கும்; (அவ்வளவே வேறுபாடு); அதாவது, முன்னதாக உணவுச் சீட்டு வாங்கியவருக்கு உணவு கிடைப்பது உறுதி. அந்தச் சமயத்திற்குச் சென்று கேட்பவருக்கு உணவு கிடைப்பது சந்தேகம்.

வினைப்பயன் கெட்டதாயினும், நல்லதாயினும் அனுபவித்தேயாக வேண்டும் என்பது மூடத்தனம்; முறையான சாதனைகளைச் செயலாற்றினால் கெட்டவைகள் நீங்கும். நல்லவைகளை அபிவிருத்தி செய்து கொள்ள அவகாசமும் இருக்கிறது:

அனைத்துள்ளும் அடங்கியிருப்பது ஆத்மா ஒன்றே என்பதை அறிந்து கொள்வதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மஞானம். மிகுந்தவைகள் கரும ஞானங்கள்.

காற்றினால் மேகங்கள் விலகி சூரியன் தென் படுவதைப் போன்று, எங்கும் நிறைந் திருக்கும் பிரம்மத்தின் தியானத்தினால், அக்ஞான மேகங்கள் விலகி ஞானம் தனி யாகப் பிரகாசிக்கும்.

''ஏகாந்தம்'' என்றால் யாராலும் துன்பம் நிகழாத இடம். ''ஏகாகி'' என்றால் இரண்டாவது நபர் இல்லாத இடம்.

பாம்பின் விஷம் தலைக்கேறியவருக்கு வேப் பிலையும் கூட இனிக்கும். அதுபோன்றே விஷய வாசனைகளில் மூழ்கியிருப்பவர் களுக்கு குற்றங்கள், பாபங்கள் மிகப் பிரியமானவைகளாகவும், நல்லவைகளா கவும், மனநிறைவை ஏற்படுத்தும்.

கடல் நீர் முழுவதையும் பருகிவிடலாம். மலைகளை எளிதில் தூக்கிவிடலாம். நெருப்பை மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதில் விழுங்கி விடலாம். ஆனால், மனோநாசம் செய்வதென்றால் மிகமிகச் சிரமம்.

மாதவனின் அனுக்கிரகத்தை அடைந்தவர்களின் மனம், அடங்கி, ஒடுங்கி அடிமையாகிவிடும்.

உலக தியாகமே ஆன்மிக போகம்.

உண்மையான பக்தன் கஷ்ட நஷ்டங்களையும், நிந்தனைகளையும், பாராட்டுகளையும், சுகத்தையும், சாந்தியையும் இவைகள் போன்ற அனைத்தையும், இறைவனின் பிரசாதமாகவே எண்ணுவான். பிரசாதங்கள் எவ்வளவோ வகையல்லவா?

பிறரை நிந்திப்பதைவிட மிஞ்சிய பாபம்—வேறொன்றில்லை. தெய்வத்தையே நிந்தித்தால், அவர்களுக்கு நரகமே நிலையான இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரிடத்திலும் இறைவன் ஆத்ம சொரு பியாக இருக்கிறார் என்கிற உண்மையை அறிந்தபின், பிறரைக் கெடுப்பதற்காக எதைச் செய்தாலும், தான் வணங்கும் தெய்வத்தையே சாரும். ஆகையால், பிறருக்கு வேதனையளிப்பது என்பது இறை வனுக்கு வேதனையளிப்பதாகும்.

கண்கள் உலகத்தில் அனைத்தையும் காண் கின்றன. ஆனால், தம்மைத்தாம் காண் பதில்லை. அதுபோன்றே உலகத்தார் இதரர்களின் தவறுகளைக் காண்கிறார்கள். தங்களைத் தாங்கள் காணமாட்டார்கள்.

சோம்பேறித்தனம் ''சீட''ப் புழுவைப் போன் றது. (செடி, கொடிகளைச் சாப்பிட்டு நாசம் செய்யும் புழு) அது மானிடத் தன்மை யையே நாசமாக்கிவிடும். முடிவில் உபயோகமற்றதாகிவிடும்.

உலகத்தை வென்றவன் வீரனே; ஆனால், தன்னைத்தான் வென்றவன் வீராதி வீரன், தீரன், கம்பீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடையது அல்லாத நாமமும், அவனில்லாத தேகமும் இல்லையென எண்ணுவது எங்கும் நிறைந்துள்ள இறைவனின், இலட்சணத்தை உணர்வதாகும்.

"ஸ்திதப்ரக்ஞன்" (நிலையான ஞானத்தையுடையவன்) எனப்படுபவனே இறைவனுக்கு நெருங்கிய சம்பந்தமுடையவன்.

சக்திக்கு மீறி வேலை செய்வதே அகங்காரம்.

சக்திக்குக் குறைவாக வேலை செய்வதே கள்ளத்தனம்.

எப்பொழுதும் நல்லவைகளையே பேசிக் கொண்டும், நல்லவைகளையே செயலாற்றிக் கொண்டும், நல்லவைகளையே சிந்தித்துக் கொண்டும் இருப்பதே சர்வ சுகம்.

இனிமையான சொற்களே சாதகனுக்கு சிறப்பு வாய்ந்த நல்வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகம் யாருடைய உடமைகளைக் கவர்ந்தது? குயில் யாருக்குக் கிரீடம் வைத்தது? வாய் நல்லதாக இருந்தால், பெயரும் நல்லதாகவே இருக்கும்.

நாக்கை வசப்படுத்திக்கொண்டால் உலகமே அவன் வசமாகிவிடும்.

ஆகார தோஷத்தினுல், எப்பொழுதும் சித்தத்தில் மாசு படிகிறது. மாசு படிந்த சித்தத்தையுடையவர்களினுல், தர்ம இரகசியமான ஞானத்தை அடைய முடியாது.

தர்க்கத்தை விட்டு, ஆர்வம், முயற்சி என்கிற இரண்டு இறகுகளினுல் சாதகன் இறைவன் என்னும் ஆகாயத்தில் இயன்றளவு பறந்து உலாவி வரலாம்.

மனம் மடியட்டும், மாயை மாயட்டும், சரீரம் சாயட்டும், ஆனுல், அவிநாசி ஆத்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக (அழிவற்ற ஆத்மாவாக) இருக்கும் உனக்கு அழிவில்லை.

எங்கே இறைவனுடைய நாமசங்கீர்த்தனத்தின் கோலாகல ஓசை ஜெய ஜெய கோஷத்துடன் எழுப்பப்படுகிறதோ, அந்த இடமே வைகுண்டம்.

தெரியாத விஷயத்தைத் தெரியாதென ஒப்புக்கொள்வது நல்லது. தெரியாமலிருந்த போதிலும் தெரியுமெனச் சொல்வது மிகவும் அபாயகரமானது. அது சாதகனுக்கு வியாதியைப் போன்றது.

எத்தகைய வீரனுகவும், தீரனுகவும் புஜபலமும், புத்தி பலமும் உள்ளவனுகவும், இருந்த போதிலும், தெய்வபலம் மட்டும் இல்லையானுல், அவன் கீழ்மகனுக இருந்து அழிவான்.

உன் க்ஷேமநல சந்தோஷங்களின் அபிவிருத்தியை நீ எப்படி விரும்புவாயோ, அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றே, அனைவரின் க்ஷேமநல சந்தோஷங்களின் அபிவிருத்தியை விரும்பு. உன்னுடைய அமைதிக்காக நீ எந்த அளவு பாடுபடுவாயோ, அந்த அளவு உலக அமைதிக்காகப் பாடுபடு. அதுவே உன்னுடைய உண்மையான தன்மை.

''சத்தியமே என் பிரசாரம்.
தர்மமே என் ஆசாரம்.
சாந்தியே என் சுபாவம்.
பிரேமையே என் சொரூபம்.''

''பாபா"

ஆசீர்வாதம் அச்சகம்
32, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org